TNVR230002512024

சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்

**முன்னிலை :- திரு.M.சண்முகவேல்ராஜ், B.A., B.L., L.L.M.,**

சார்பு நீதிபதி, இராஜபாளையம்.

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ம் நாள் புதன்கிழமை

**A.S.No.45/2024**

CNR No.TNVR230002512024

-----------

* * 1) வைரவகோனார்(Died)

* * 2) போஜராஜன்

* * 3) ராஜலட்சுமி

* * 4) முருகேஸ்வரி

* * 5) கோபாலகிருஷ்ணன்

* * * 6) ராஜேந்திரன் … மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

* 1) மாரிமுத்து

* 2) ராஜசுந்தரி

* 3) ராஜா

* 4) ராஜகோபால் … எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள்

* Impleaded as per order in I.A.No.04/2023, Dated.07.12.2023
* Amended as per order in I.A.No.05/2024, Dated.29.02.2024
* * Amended as per order in I.A.No.10/2025, Dated.22.07.2025
* * * Amended as per order in I.A.No.11/2025, Dated.18.11.2025

கீழமை நீதிமன்றமான கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவில்லிப்புத்தூர் அ.வ.எண்.268/2009, நாள்.17.02.2017 படி பிறப்பித்த தீர்ப்பின் பேரில் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>விசாரணை நீதிமன்ற தரப்பினர்கள் விவரம்</u>**

மாரிமுத்து என்ற மாரிமுத்தம்மாள் …வாதி

/எதிர்/

வைரவக்கோனார் …பிரதிவாதி

**<u>இ.ம.எண்.01/2019</u>**

**1) வைரவகோனார்(Died)

**2) போஜராஜன்

**3) ராஜலட்சுமி

**4) முருகேஸ்வரி

**5) கோபாலகிருஷ்ணன் …மனுதாரர்/மேல்முறையீட்டாளர்

/எதிர்/

1) மாரிமுத்து என்ற முத்தம்மாள்(Died)

2) ராஜசுந்தரி

3) ராஜா

4) ராஜகோபால் … எதிர்மனுதாரர்கள்/ எதிர்மேல்முறையீட்டாளர்கள்

* Amended as per order in I.A.No.06/2024, Dated.19.11.2024
* Amended as per order in I.A.No.09/2025, Dated.22.07.2025

இந்த மேல்முறையீடு மனுவானது ஸ்ரீவில்லிப்புத்தூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் A.S.No.19/2017 ஆக 05.04.2017 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வந்த நிலையில், அதிகார வரம்பிற்கு உட்பட்டு இந்த மேல்முறையீடு மனுவும், இடைநிலை மனுவும் இராஜபாளையம், சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் A.S.No.45/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவானது 26.02.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது

மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் திரு.K.காளிதாஸ் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் இறந்துவிட்ட காரணத்தினாலும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் …

## தீர்ப்புரை

**1) விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தன்மை:-**

பிராது 1, 2, 3 தபசில் சொத்துக்களை 4 சம பாகங்களாக பிரித்து அதில் வாதிக்குரிய 1 பாகத்தை (கால் பங்கை) வாதிக்கு தனித்து ஒதுக்கி வாதி வசம் சுவாதீனம் கொடுக்க முதல்நிலை தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க கோரியும், முதல் நிலை தீர்ப்பாணையின்படி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும் மற்றும் வழக்கின் செலவுதொகை கோரியும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மேல்முறையீட்டு வழக்கின் சுருக்கம் :-**

மேல்முறையீட்டினை அனுமதித்து கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவில்லிப்புத்தூர் அசல் வழக்கு எண்.268/2009, நாள்.17.02.2017ம் தேதி அசல் வழக்கினை தள்ளுபடி செய்து பிறப்பித்த தீர்ப்பு, தீர்ப்பாணையினை ரத்து செய்து மேல்முறையீட்டினை அனுமதித்து தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கக்கோரி மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** இதற்கு மேற்கொண்டு இந்த மேல்முறையீட்டில், மேல்முறையீட்டாளர் விசாரணை நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டது போல பிரதிவாதிகள் என்றும்,

எதிர்மேல்முறையீட்டாளர் வாதி என்றும் அழைக்கப்படுவார்கள்.

4) **விசாரணை நீதிமன்றத்தில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்** :-

பிராதில் கண்ட பிரகாரம் கோபால் கோனார் என்பவருக்கும், ராக்கம்மாள் என்பவருக்கும் பிறந்த மூத்த மகன் பிரதிவாதி ஆவார். இளைய மகள் வாதி ஆவார். தமது சொத்துக்களுக்கு மேற்படி இருவரையும் வாரிசுகளாக விட்டு விட்டு கோபால் கோனார் மற்றும் அவரது மனைவி ராக்கம்மாளும் இயற்கை மரணம் அடைந்துவிட்டனர். தபசில் 1, 2, 3 சொத்துக்கள் மேற்படி கோபால் கோனாரின் தந்தை வழி பூர்வீக சொத்துக்களாகும். மேற்படி இருவரும் வாதியின் வீட்டில் கடைசி காலம் வரை தங்கியிருந்து தமது மகளான வாதியிடம் அன்ன ஆகாரம் உடை, இருப்பிடம், மருத்துவ செலவு போன்ற அனைத்து சௌகரியங்களையும் பெற்று வாதியின் அரவணைப்பிலேயே இருந்து இறந்துவிட்டனர். மேற்படி இருவருக்கு பின்னர் வாதி, பிரதிவாதி இருவரும் குடும்ப சொத்துக்களை எவ்வித பாகப்பிரிவினை செய்யாமல் பொதுவாக அனுபவித்து வந்தார்கள். பிராது தபசில் 1, 2, 3 சொத்துக்களில் வாதிக்கு பிரிவினையில்லாத ¼ (கால்பங்கு) சொத்தும், பிரதிவாதிக்கு ¾ (முக்கால்) பங்கு சொத்தும் சித்தித்து உள்ளது. வாதியின் பெற்றோர்கள் வாதி மற்றும் பிரதிவாதிக்கு பூர்விக சொத்துக்களை பெரியோர்கள் முன் பேசி பிரித்துக் கொள்ளுங்கள் என கூறியதால் தபசில் சொத்துக்களை பிரிக்காமல் இருந்தனர். எனவே தபசில் சொத்துக்கு பிரதிவாதியின் பெயரிலேயே பட்டா வாங்கி அனுபவித்து வந்தனர். வாதி தபசில் சொத்துக்களில் தமக்குரிய பிரிவினை இல்லாத பாகத்தை பிரித்துக் கொடுக்கும்படி பலதடவை நேரிலும் தமது உறவினர்கள் மூலம் கேட்டும் பிரித்து தருவதாக வாதி வீண் காலதாமதம் செய்து

வந்தார். வாதி தமக்குரிய பங்கினை பிரித்து கொடுக்க வழக்கறிஞர் மூலம் 7.5.2009 ல் அறிவிப்பு அனுப்பியும் பல பொய்யான தகவல்களை கூறி பிரதிவாதி 9.5.2009 ல் பதில் அறிவிப்பு அனுப்பி உள்ளார். எனவே வாதியால் தபசில் சொத்துக்களில் வாதிக்குரிய பாகத்தை தனித்து பிரித்து சுவாதீனம் கொடுக்க கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) **விசாரணை நீதிமன்றத்தில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்** :-

வாதி தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல. ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகள் மறுக்கப்படுகிறது. வாதி மற்றும் பிரதிவாதியின் உறவு முறை குறித்தும் தபசில் சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. 2ம் தபசில் சொத்து காலியிடமாக இருந்து, பிரதிவாதி இராணுவத்தில் பணி புரிந்து கிடைத்த ஓய்வூதிய தொகையில் 2 வது தபசில் சொத்தில் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார். எனவே 2 வது தபசில் சொத்து பூர்வீக சொத்து கிடையாது. வாதிக்கு திருமணத்தின் போது சுமார் 40 பவுன் நகை சீதனமாக கொடுத்துள்ளார், திருமணத்திற்கு பின் 5 வருடங்கள் சொக்கலிங்காபுரத்தில் குடியிருந்தார் பின் வாதியின் கணவர் சென்னையில் காவல் துறையில் பணி செய்ததால் சென்னையில் சென்று 35 வருடங்களுக்கு மேலாக அங்கேயே தங்கி விட்டார். வாதியின் தகப்பனார் காலமான பின்னர் வாதி பூர்வீக சொத்தில் தனக்குரிய பங்கிற்கு சொத்து கொடுக்குமாறு கேட்டதில் 35 வருடங்களுக்கு முன் வாதியின் பங்கிற்கு நிகராக ஒரு இடத்தை கொடுத்து அதில் பிரதிவாதி ரூ.25,000- வரை செலவு

செய்து அதில் வாதிக்கு வீடு கட்டி கொடுத்துள்ளார். வாதியின் பங்கிற்கு கொடுக்கப்பட்ட வீட்டின் கதவு எண் 11/32. இதர பூர்வீக சொத்துக்களை பிரதிவாதி பாகத்திற்கும் என வாய்மொழி குடும்ப ஏற்பாடு செய்து கொண்டனர்.

அதன்படி வாதியும், பிரதிவாதியும் அவரவர் பாக சொத்துக்களை தனித்தனியாக அனுபவித்து வருகின்றனர்.வாதி குடும்ப ஏற்பாட்டின்படி அவருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டை இந்த வழக்கில் காட்டவில்லை. பிராது தபசில் சொத்துக்களை பிரதிவாதி தன்னுடைய தனிப்பட்டா சொத்தாக 35 வருடங்களாக பட்டா பெற்றும் தீர்வை செலுத்தியும் அனுபவித்து வருகிறார். தபசில் சொத்துக்களை வாதியும், பிரதிவாதியும் எப்போதும் கூட்டாக அனுபவித்து வந்தது கிடையாது. தபசில் சொத்துக்களை பிரதிவாதி சட்ட வரம்பு காலத்திற்கு மேலாக தனித்தும், வெளிப்படையாகவும், தொடர்ச்சியாகவும் அனுபவித்து வருவதால் தபசில் சொத்துக்களில் எதிரிடை அனுபவ உரிமை ஏற்பட்டு விட்டது. வாதி தபசில் சொத்துக்களில் கடந்த 35 வருடங்களாக உரிமை எதுவும் கோராததால் உரிமை நீக்கம் என்ற தோசத்தினாலும் காலவரை சட்டத்தாலும் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது. வாதி அனுப்பிய பொய்யான விவரங்களுடன் கூடிய சட்ட அறிவிப்புக்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பி உள்ளார். தபசில் சொத்துக்களில் வாதிக்கு உரிமை இல்லை. 1.4.1996 ம் தேதியில்மறுப்பு தெரிவித்து பதில் அறிவிப்பு அனுப்பியதால் அதன்பின்பு 12 வருடங்களுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்த இந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. வாதிக்கு ஒதுக்கப்பட்ட வீட்டை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் (Partial partition) என்ற தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சொத்துக்கள் பாகபிரிவினை ஆகி விட்டதால் திரும்பவும் பாகப்பிரிவினை கோருவதற்கு வாதிக்கு உரிமை இல்லை. சரியான சொத்து விபரம் கொடுக்கப் படவில்லை. வாதியின் வழக்கு மூலங்கள் தவறானது. வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது. எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

6) **<u>விசாரணை நீதிமன்றத்தில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில்வழக்குரையின் சுருக்கம்</u>** :-

பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியுள்ள கூற்றுகள் அனைத்தும் பொய்யென மறுக்கப்படுகிறது. 2 வது தபசில் சொத்தில் கட்டப்பட்ட வீடு பூர்வீகமாக பாத்தியப்பட்ட விவசாய நிலத்தில் கிடைத்த வருமானத்தை வைத்து கட்டப்பட்டது. எனவே பிராது 2 வது தபசில் சொத்து பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து இல்லை, 35 வருடங்களுக்கு முன் வாதியின் பங்கிற்கு ஒரு இடத்தை கொடுத்து பிரதிவாதி அதில் ரூ.25,000/- வரை செலவு செய்து வீடு கட்டி கொடுத்தார் என்பதும் உபய தரப்பினர்களுக்கிடையே பெரியோர் முன்பு வாய்மொழி குடும்ப ஏற்பாடு நடைபெற்றதாகவும் கூறுவது மறுக்கப்படுகிறது. 10.6.1966 ம் தேதி பதிவு செய்யப்பட்ட நன்கொடை பத்திரம் வாதியின் தகப்பனார் வாதிக்கு கொடுத்த போது அது காலிமனையாக இருந்தது. அதில் வாதி தனது கணவரின் வருமானத்தை கொண்டு வீடு கட்டினார். எனவே மேற்படி வீட்டினை வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. 3 வது தபசிலான விவசாய நிலத்திலிருந்து பிரதிவாதி, வாதியின் பங்கிற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்தி வந்ததால் வாதியும் கூட்டு உரிமையாளர் ஆவார். 01.4.1996 ம் தேதி பிரதிவாதி, வாதியின் சட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பி உள்ளதால் வாதியின் வழக்கு காலாவதி

தோஷத்தினால் பாதிக்கப் பட்டுள்ளதாக கூறுவது மறுக்கப்படுகிறது. ஏனெனில் மேற்படி பதில் அறிவிப்பை பெற்றுக் கொண்ட வாதி நீதிமன்றம் மூலம் வழக்கு தாக்கல் செய்ய ஏற்பாடு செய்த போது, பிரதிவாதி தனது உறவினர்கள் வைரவன், தேவராஜ் மூலம் வாதியை அணுகி வழக்கு தாக்கல் செய்ய வேண்டாம் விவசாய நிலத்தில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுப்பதாக கூறி 1977 ம் வருடம் வாய்மொழி குடும்ப ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி விவசாய நிலத்தில் செலவுகள் போக மீதம் உள்ள தொகையில் 4 ல் ஒரு பங்கு வாதிக்கு தொடர்ந்து பிரதிவாதி செலுத்தி வந்தார் எனவே வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்படவில்லை.

7) **<u>விசாரணை நீதிமன்றத்தில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>** :-

வாதியின் தகப்பனார் இறந்த பின்னர் வாதி, பிரதிவாதியிடம் தனக்குரிய பங்கை பிரித்துக் கொடுக்குமாறு கேட்டு வந்த சமயத்தில் ஊர் பெரியவர்கள் தலையிட்டு வாதிக்குரிய பங்கிற்கு தற்போது கதவு எண் 32 உள்ள வீட்டினை ஒதுக்கி கொடுத்து பிரதிவாதி ரூ.25,000- செலவு செய்து வீடு கட்டி அதில் வாதி அனுபவித்து வருகிறார். ஏற்கனவே வாய்மொழி குடும்ப ஏற்பாட்டின்படி பாகப்பிரிவினை ஆகி விட்டதால் மேலும் பாகப்பிரிவினை ஏற்பட சட்டப்படி உரிமையில்லை. வாதியின் கோரிக்கை முரண்தடை (Estoppel) என்ற தோஷத்தால் தடைபட்டுள்ளது. காலிமனை மட்டும் வாதிக்கு கொடுத்ததாகவும், விவசாய நிலத்தில் இருந்து வாதியின் பங்கிற்கு குறிப்பிட்ட தொகை பிரதிவாதி கொடுத்ததாகவும் கூறுவது மறுக்கப்படுகிறது. 1997 ம் வருடம்

வாய்மொழி குடும்ப ஏற்பாடு நடந்ததாகவும்,விவசாய கடன்களை தீர்த்த பின்னர் பாகம் பிரித்துக் கொள்வதாகவும் அதன்படி பிரதிவாதி, வாதிக்கு தொகை செலுத்தி வந்ததாகவும் கூறுவது மறுக்கப்படுகிறது. மேலும் வாதி பூர்வீக விவசாய நிலத்தில் இருந்து வருமானம் கிடைத்ததாகவும், அதில் இருந்து 2 வது தபசில் சொத்தில் வீடு கட்டியதாகவும் கூறுவது மறுக்கப்படுகிறது. 10.6.1966 தேதிய நன்கொடை பத்திரம் குறித்து மறுக்கப்படுகிறது. குடும்ப ஏற்பாட்டின்படியே 32 கதவு எண் உள்ள இடத்தினை வாதிக்கு ஒதுக்கி அதில் பிரதிவாதி அவரது செலவில் வீடு கட்டி கொடுத்தார். 3 வது தபசில் சொத்தில் வாதியின் பங்கிற்கு எந்த தொகையும் வாதிக்கு,பிரதிவாதி செலுத்தவில்லை. எனவே வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்

**8) விசாரணை நீதிமன்றம் மேற்கண்ட வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து வழக்கின் பிரச்சனையைத் தீர்க்கும் விதத்தில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் மற்றும் கூடுதல் எழுவினாக்கள் வனைந்திருந்தது.**

1. பிராது தபசில் சொத்துக்களில் வாதிக்கு ¼ பாக பாத்திய உரிமை உள்ளதா?
2. வாதி கோரியுள்ள முதல்நிலை தீர்ப்பாணை வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
3. தாவா சொத்துக்களில் பிரதிவாதிக்கு எதிரிடை அனுபோகம் சித்தித்துள்ளதா?
4. வாதியின் வழக்கானது காலாவதி தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதா?
5. வாதியின் வழக்கானது உடமை நீக்கம் என்ற கோட்பாட்டினால் பாதிப்பு அடைந்துள்ளதா?
6. தாவா வழக்கானது பகுதி சொத்துக்களை மட்டுமே சேர்த்துள்ள தோஷத்தால் பாதிப்படைந்துள்ளதா?
7. வழக்குரை தபசில் சொத்துக்கள் சம்பந்தமாக உபய வாதிகளிடையே ஏற்கனவே பாகப்பிரிவினை நடைபெற்றுவிட்டது என்பது உண்மையா?
8. முறையான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்பது உண்மையா?

9) மேற்கண்ட எழுவினாக்களைப் பொறுத்து வாதி தரப்பில் வாசா.1 முதல் வா.சா.4 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) விசாரணை நீதிமன்றத்தின் முன் இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இருதரப்பிலும் வாதுரைகளைக் கேட்டும் முடிவில், விசாரணை நீதிமன்றம் வாதியின் வழக்கை அனுமதித்து தீர்ப்பு வழங்கியிருந்தது. மேற்படி தீர்ப்பினால் பாதிக்கப்பட்ட பிரதிவாதி இந்த மேல்முறையீட்டை ஸ்ரீவில்லிப்புத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 17.02.2017 ம் தேதியில் அ.வ.எ.ண்.268/2009 வழக்கில் பிறப்பித்துள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து வழக்கினை முழுவதுமாக செலவு தொகையுடன் அனுமதிக்கக்கோரி தாக்கல் செய்துள்ளார்.

11) **<u>மேல்முறையீட்டு வழக்கின் சுருக்கம்</u>** :-

கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் நடைமுறை சட்டம் சட்ட விதிகளுக்கும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிகளுக்கும், சான்றாவணங்களுக்கும் முற்றிலும் முரண்பட்டதாகும்.

கீழமை நீதிமன்றம் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை சரியாக விவரிக்காமல் வழக்கினை அனுமதித்து பிறப்பித்த தீர்ப்பு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல.

மேல்முறையீடு சொத்துக்களில் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எந்தவித

பங்கும் கிடைக்கத்தக்கதல்ல. எதிர்மேல்முறையீட்டாளர் தபசில் சொத்துக்களில் கூட்டு உரிமையாளர் என்பது நிரூபிக்கப்படாத நிலையில் கீழமை நீதிமன்றம் எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்கை அனுமதித்து தீர்ப்பு பிறப்பித்துள்ளது சட்டத்திற்கு புறம்பானதாகும்.

மேல்முறையீட்டில் கண்டுள்ள தபசில் சொத்துக்கள் மேல்முறையீட்டாளரின் தகப்பனார் வழி சொத்துக்கள் ஆகும். தபசில் சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்கனவே கடந்த 1966ம் வருடம் குடும்ப ஏற்பாடு செய்யப்பட்டு மேற்படி குடும்ப ஏற்பாட்டில் எதிர்மேல்முறையீட்டாளருக்கு தபசில் சொத்துக்களுக்கு அருகில் உள்ள கதவு எண். 11/32 என்ற வீட்டினை ஒதுக்கி கொடுத்துள்ளனர். ஷை வீட்டினை எதிர்மேல்முறையீட்டாளர் தான் தற்போது வரை அனுபவித்து வருகிறார். ஏற்கனவே வாதி, பிரதிவாதிகளுக்கிடையில் அவர்களது பூர்விக சொத்துக்கள் பிரிக்கப்பட்டுவிட்டதால் தாவா வழக்கு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத்தக்கது என்பதையும் கீழமை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது.

மேலும், கீழமை நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில் வாதி, அவருக்கு கொடுக்கப்பட்ட கதவு எண்.11/32 கண்ட சொத்துக்களை அசல் வழக்கில் சேர்க்காததால் தாவா வழக்கு பகுதிப்பாகப்பிரிவினை செய்ய முடியாது என்ற சட்டக்கருத்தின் அடிப்படையில் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு பிறப்பித்திருக்க வேண்டும்.

தபசில் கண்ட சொத்துக்கள் எதுவும் வாதியின் கூட்டு அனுபவத்தில் கிடையாது. வாதி, பிரதிவாதியிடம் பாகம் கேட்டு கடந்த 1996ம் வருடம் Ex.B1ன் படி அறிவிப்பு அனுப்பினார். மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதி தகுந்த பதில் அறிவிப்பு

அனுப்பியுள்ளார். ஷை பதில் அறிவிப்பு விவரங்களை வாதி (PWI) அவரது குறுக்கு விசாரணையில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் கீழமை நீதிமன்றம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பாததால் Ex.B1 சம்மந்தமாக காலதோஷம் குறித்து கேள்வி எழுப்ப முடியாதென தன்னுடைய தீர்ப்பில் சட்டத்திற்கு புறம்பாக தீர்வு கண்டுள்ளது ஏற்கத்தக்கதல்ல. பதில் அறிவிப்பு 1996 ம் வருடம் அனுப்பப்பட்டது. அதன் நகல்கள் எதுவும் பிரதிவாதியிடம் இல்லை. இருந்தபோதிலும் வாதியால் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஒப்புக்கொள்ளப்பட்ட விவரங்கள் சம்மந்தமாக நிரூபிக்க வேண்டிய கடமை எதுவும் பிரதிவாதிக்கு கிடையாது. மேற்படி சட்டக்கருத்துக்கள் எதையும் கீழமை நீதிமன்றம் சரியாக உற்று நோக்காமல் வழக்கினை அனுமதித்து பிறப்பித்துள்ள தீர்ப்பு எடுத்த எடுப்பிலேயே ரத்து செய்யத்தக்கதாகும்.

பி.வா.சா.ஆ.1ன் படி 1996 ம் வருடம் வாதி, பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பிய பின்னர் 12 ஆண்டுகளுக்கு பிரதிவாதியிடம் பாகம் எதுவும் கேட்கவில்லை. தபசில் சொத்துக்களை கூட்டாகவும் அனுபவித்தது கிடையாது. வாதி அவரது வழக்குரையில் பி.வா.சா.ஆ.1 அறிவிப்பு சம்மந்தமாக எந்த பிரதிவாதி விவரத்தையும் தெரிவிக்காமல் மறைத்துவிட்டார். பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னர் தான் வாதி, பதில் வழக்குரையில் புதிதாக கதைகளை கூறியுள்ளார். பி.வா.சா.ஆ.1 அறிவிப்பிற்கு பிறகு ஏதோ PW2, PW3 சாட்சிகளான தேவராஜ், வைரவன் ஆகியோர்கள் மூலம் சமரகம் பேசியதாகவும், பிரதிவாதி அவரது கடனை அடைத்த பின்னர் பங்கு பிரித்து தருவதாகவும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய். PW3 சாட்சியான

வைரவன் அவரது குறுக்கு விசாரணையில் அது போன்று யாரும் சென்று பிரதிவாதி வைரவக்கோனாரிடம் பேசவில்லை என தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், வாதிக்கு தனியாக சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு அவர் தனியாக அனுபவித்து வருகிறார் என்பதையும் தெளிவாக கூறியுள்ளார். ஷை சாட்சியங்கள் எதையும் கீழமை நீதிமன்றம் சீர்தூக்கி பார்க்காமல் வழக்கை அனுமதித்து பிறப்பித்துள்ள தீர்ப்பு சமூகம் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

வாதிக்கு அவரது குடும்பத்தில் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின்படி கடந்த 1966 ம் வருடம் தபசில் சொத்துக்கள் அமைந்துள்ள சொக்கலிங்காபுரம் கிராமத்தில், கதவு எண்.11/32 வீட்டினை ஒதுக்கிக்கொடுத்துள்ளனர். மேலும், இந்த பிரதிவாதி ரூ.25,000/- செலவு செய்து அந்த சமயத்திலேயே ஷை வீட்டினை புதுப்பித்து கட்டிக் கொடுத்துள்ளார். அந்த சமயத்தில் இருந்தே வாதி எந்த காலத்திலும் தபசில் சொத்துக்களை அனுபவிக்கவில்லை. வாதி பதில் வழக்குரையில் ஒரு குறிப்பிட்ட தொகையை அவரது பங்காக பிரதிவாதி செலுத்தி வந்தார் என்று கூறி வந்தபோதிலும் எவ்வளவு தொகை, எத்தனை வருடங்கள் கொடுக்கப்பட்டது என்பது சம்மந்தமாக குறிப்பாக கூறவில்லை. வாதி திருமணம் முடித்த நாளில் இருந்து சென்னையில்தான் அவரது கணவருடன் வாழ்ந்து வந்தார். வாதியின் கணவர் இறந்த பிறகும், வாதி சென்னையில் தான் தற்போதுவரை நிரந்தரமாக குடியிருந்து வருகிறார். தாவா சொத்துக்கள் முழுவதும் பிரதிவாதியின் தனிப்பட்ட அனுபவத்தில் 1966 ம் வருடத்தில் இருந்து இருந்து வருகிறது. அதற்குண்டான ஆவணங்களான தீர்வு ரசீதுகள், பட்டாக்களை பி.வா.சா.ஆ.2 முதல் 6 வரை பிரதிவாதி கீழமை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளார். ஷை ஆவணங்களை கவனத்தில் கொண்டு வாதியின் பரிகாரம் உடமை நீக்கத்தால் செல்லத்தக்கதல்ல என முடிவு செய்து கீழமை நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்ய தவறிவிட்டது.

அசல் மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருந்த சமயம் எதிர்மேல்முறையீட்டாளரான மாரிமுத்து (எ) மாரிமுத்தம்மாள் என்பவர் கடந்த 16.04.2021 தேதி 2 முதல் 4 வாரிசுகளாக எதிர்மேல்முறையீட்டாளர்களை மட்டும் தன்னுடைய விட்டுவிட்டு இறந்துவிட்டார். இறந்துபோன எதிர்மேல்முறையீட்டாளர் மாரிமுத்து (எ) மாரிமுத்தம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட ஜங்கம ஸ்தாவர சொத்துக்களை வாரிசு அடிப்படையில் இந்நிர் 2 முதல் 4 எதிர்மேல்முறையீட்டாளர்கள் தான் வாரிசு அடிப்படையில் அடைந்து அனுபவித்து வருகின்றனர். எதிர்மேல்முறையீட்டாளரான எனவே இறந்துபோன மாரிமுத்து (ஏ) மாரிமுத்தம்மாள் 4 எதிர்மேல்முறையீட்டாளர்களை என்பவருக்கு இந்நிர் 2 முதல் வாரிசுகளாக சேர்க்க கோரி சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 2.5.6.4/2023 மனுவானது கடந்த 07-12-2023 தேதி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஷை மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 2 முதல் 4 எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

அப்பில் வழக்கு சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்த நிலையில் 1ம் அப்பீல் வாதி வைரவகோனார் என்பவர் கடந்த 18.01.2025ம் தேதி இறந்துவிட்டார். இறந்துபோன 1 ம்அப்பீல் வாதிக்கு அவரது மனைவியான ராஜம்மாள் என்பவரும் மற்றும் மகள் வில்லாத்தாள் ஆகியோர்கள் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள். 1ம்அப்பில்

வாதி இறப்பதற்கு முன்பே அவரின் மனைவி ராஜம்மாள் என்பவரும் மற்றும் 2 முதல் 5 அப்பீல் வாதிகளின் தாயார் வில்லாத்தாள் என்பவரும் இறந்துவிட்டார்கள். இறந்துபோன 1ம்அப்பில் வாதியான வைரவகோனார் என்பவருக்கு பாத்தியப்பட்ட ஸ்தாவர சங்கம சொத்துக்களை அவர் இறந்தபின்னர் அ.வாதிகள் தான் வாரீசு அடிப்படையில் அடைந்து அனுபவித்து வருகிறாரர்கள். இந்நிலையில் அப்பீல் வழக்கில் 1ம் அப்பீல் வாதியின் வாரீசுகளான 2 முதல் 5 அவாதிகளை சமூகம் நீதிமன்றத்தில் இ.ம.எண்.10/2025 என்ற மனு தாக்கல் செய்ததில் மேற்படி மனு கடந்த 27.06.2025 ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் மேல்முறையீடு வழக்கு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு நிலுவையில் அசல் மேல்முறையீட்டு இருந்து வரும் சமயம் 1ம் மேல்முறையீட்டாளர் வைரவகோனார் கடந்த 18.01.2025 இறந்துபோன தேதி இறந்துவிட்டார். வைரவகோனாரின் மனைவி பெயர் ராஜம்மாள். மகள் பெயர் வில்லாத்தாள். மேற்படி இருவரும் வைரவக்கோனார் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டனர். வைரவக்கோனாருக்கு வில்லாத்தாள் மட்டும் தான் ஒரே வாரிசு ஆவார். அவரும் இறந்துவிட்டதால் அவரின் சட்டப்படியான வாரிசுகளாக இந்நிர் 2 முதல் 5 மேல்முறையீட்டாளர்கள் தான் வாரிசு என்று வாரிசு மனு தாக்கல் செய்து மேற்படி வாரிசு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மேல்முறையீட்டினை சீர்திருத்தம் செய்யகோரி சீர்திருத்த மனு தாக்கல் செய்து மேற்படி சீர்திருத்த மனுவும் சமூகம் நீதிமன்றத்தால் கடந்த 22.07.2025 ம் தேதி அனுமதிக்கப்பட்டு 2 வது சீர்திருத்த மேல்முறையீடும் சமூகம் சட்டப்படி நீதிமன்றதில் தாக்கல் செய்யப்பட்டு விட்டது.

வாரிசுரிமை மேல்முறையீட்டாளரான தபசில் வைரவக்கோனார் இறந்தபிறகு சொத்துக்கள் அவரது மகளான வில்லாத்தாள் என்பவருக்கு ஏற்படுவதால் கிடைக்கப்பெற்று அதனடிப்படையில் இறங்குரிமை வில்லாத்தாளின் கணவரான 6 ம் மேல்முறையீட்டாளரை மேல்முறையீட்டு வழக்கில் சேர்க்க கோரி இ.ம.எண்.11/2025 என்ற மனு தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மேல்முறையீட்டு வழக்குரை சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

தாவா சொத்துக்கள் எதுவும் வாதியின் கூட்டு அனுபவித்தில் இல்லாததால் வாதி நீதிமன்றக்கட்டணச்சட்டம் பிரிவு 37(2) பிரிவு 37(1) ன்படி செலுத்தியுள்ள நீதிமன்றக்கட்டணம் தவறானதாகும். கட்டியிருக்கவேண்டும். படிதான் வாதி நீதிமன்றக்கட்டணம் ஷை காரணத்திற்காகவும் வாதிக்கு வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல கீழமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்க தவறிவிட்டது.

எனவே, மாண்புமிகு நீதிமன்றம் இம்மேல்முறையீட்டை அனுமதித்து கீழமை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும், தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரி மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**12) இந்த மேல்முறையீட்டை தீர்வு காண்பதற்காக பின்வரும் வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளது.**

1) ஸ்ரீவில்லிப்புத்தூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 17.02.2017 ம் தேதியில் அசல் வழக்கு எண்.268/2009 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சரியானதா?

2) மேல்முறையீட்டாளர்களுக்கு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் என்ன?

13) **இ.ம.எண்.01/2019**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் 151 ன் படி கட்டளை 41 விதி 27 ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், அவிடவிட்டில் கண்ட காரணங்களினால் கூடுதல் ஆவணத்தை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

14) **மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்**: -

நான் இந்த மனுவில் மனுதாரர். அசல் மேல்முறையீட்டில் மனுவில் மேல்முறையீட்டாளர் ஆவார்.

எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி எனக்கு எதிராக விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பினை எதிர்த்து பிரதிவாதி ஆகிய நான் நீதிமன்றத்தில் தாவா அசல் மேல்முறையீட்டினை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அசல் மேல்முறையீட்டை இந்த அபிடவிட்டின் ஒரு பாகமாக எடுத்துக்கொள்ள நீதிமன்றத்தில் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

எதிர்மேல்முறையீட்டாளர் தனது உடன்பிறந்த சகோதரி. மேல்முறையீட்டு தபசில் சொத்துக்கள் சம்மந்தமாக பாகப்பிரிவினை கேட்டு அசல் வழக்கினை தாக்கல் செய்திருந்தார். அசல் வழக்கு கடந்த 2009 ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டது. தாவா சொத்துக்கள் முழுவதும் பூர்விக சொத்துக்கள் ஆகும். எனது சகோதரியான மேல்முறையீட்டாளருக்கு 1966 ம் வருடம் திருமணம் செய்து வைத்தேன். அதனால் தாவா சொத்துக்களில் அவருக்கு எந்த பங்கும் கிடையாது. மேலும் எதிர்மனுதாரர் கடந்த 1996 ம் வருடம் பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதற்கு மனுதாரர்

01.04.1996 ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பினார். அதன்பிறகு 14 ஆண்டுகள் கழித்து அசல் வழக்கினை தாக்கல் செய்தார். அதனால் தாவா வழக்கு காலவரையறை சட்டப்படி செல்லாது என்றும், தாவா வழக்கினை ஆரம்பகாலம் முதல் நான் தான் அனுபவித்து வருகிறேன் என்ற உடைமை நீக்கம் கட்சியும் செய்து வழக்கினை நடத்தினார். மனுதாரர் கட்சியை விசாரணை நீதிமன்றம் ஏற்காததால் தாவா மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில் தாவா சொத்துக்கள் நாளது தேதிவரை தனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை காண்பிப்பதற்கு உண்டான தீர்வை ரசீதுகள் மற்றும் மின்கட்டண ரசீதுகளை தாவா மேல்முறையீட்டில் எனது தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. அப்போது தான்எனது கட்சியை நிரூபிக்க முடியும். எனவே தற்போது எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. அப்போது தான் எனது கட்சியை நிரூபிக்க முடியும். எனவே தற்போது எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. அவ்வாறில்லாத பட்சத்தில் எனக்கு ஏகப்பட்ட கஷ்டங்கள் ஏற்படக்கூடியதாக உள்ளது.

அசல் இ.ம.எண்.1/2019 மனு நிலுவையில் இருந்த சமயம் 1ம் எதிர்மனுதாரரான மாரிமுத்து என்ற மாரிமுத்தம்மாள் என்பவர் கடந்த 16.04.2021ம் தேதி 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை மட்டும் தன்னுடைய வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். இறந்துபோன 1ம் எதிர்மனுதாரருக்கு மாரிமுத்து என்ற மாரிமுத்தம்மாள் என்பவரின்

வாரிசுகளை அசல் மேல்முறையீட்டு வழக்கில் தரப்பினராக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இந்த மனுவில் 1 ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளாக 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

எனவே, இந்த மாண்புமிகு நீதிமன்றம், மேல்முறையீட்டில் கூடுதல் ஆவணமாக தாக்கல் செய்வதற்கு இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

15) <u>எதிர்மேல்முறையீட்டாளர்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u> :-

தாவா மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதல்ல. தாவா அசல் வழக்கு ஒரு பாகப்பிரிவினை வழக்காகும். மேல்முறையீட்டாளர் தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அந்த சொத்துக்கள் எப்போது எப்படி வாதிக்கு கிடைத்தது என்பதை கூறாமல் ஏதோ தபசில் சொத்திற்குரிய தீர்வை மற்றும் மின் கட்டண ரசீதுகளை தாவா மேல்முறையீட்டில் தாக்கல் செய்ய கூறியிருப்பது சட்டப்படியும், நியாயப்படியும் தவறாகும். மேற்படி தீர்வை ரசீதுகள் மற்றும் மின் கட்டண ரசீதுகளை வைத்து சொத்தின் உரிமை குறித்து முடிவு செய்ய இயலாது என மாண்புமிகு உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற தீர்ப்புகள் தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில் தீர்வை ரசீதுகள், மின் கட்டண ரசீதுகள் மேல்முறையீட்டு வழக்கில் தாக்கல் செய்து மனு செய்திருப்பது சட்டப்படியும், நியாயப்படியும் தவறாகும். எனககு 1966 ம் வருடம் மேல்முறையீட்டாளரால் திருமணம் செய்து வைத்ததாகவும், அதனால் எனக்கு சொத்துக்களில் பங்கு இல்லை என கூறுவது தவறாகும். எனது திருமணம் எனது பெற்றோர்களால் நடத்தி வைக்கப்பட்டது. நான் 1996 ல் பாகம் கோரி எனது வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன்.

அதற்கு எனது சகோதரர் ஊரில் உள்ள முக்கிய நபர்கள் முன்பு பாகத்தை பிரித்து தருவதாகவும், தனது கடனை அடைத்ததற்காக சிறிது காலம் கால அவகாசம் கோரியதால் நான் உடன் வழக்கு தாக்கல் செய்யவில்லை. மேற்படி விபரம் சமூகம் கீழமை நீதிமன்றத்தில் வெளிச்சத்திற்கு வந்துவிடும் என்பதற்காகவே மேல்முறையீட்டாளரை சாட்சியளிக்க அனுமதிக்காமல் மேற்படி மேல்முறையீட்டாளர் மனைவியும், அவரது மருமகனும் சேர்ந்து விசாரணை நீதிமன்ற வழக்கை நடத்தியிருந்தனர். தீர்வை ரசீதுகள் மற்றும் மின் கட்டண ரசீதுகள் குடும்ப கர்த்தா என்ற முறையில் மேல்முறையீட்டாளரால் செலுத்தி வரப்பட்டது. அதற்கான செலவு தொகையை நான் எனது பங்கு தொகையை செலுத்தி சொத்தினை கூட்டாகவே அனுபவம் செய்து வந்தேன். எனவே, பாகப்பிரிவினை வழக்குகள் அனுபவத்தை வைத்து முடிவு செய்யக்கூடிய வழக்கு அல்ல. தாவா மேல்முறையீட்டை காலதாமதம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் தனக்கு மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். தாவா மனுவை அனுமதிப்பதினால் மனுதாரர்/மேல்முறையீட்டாளருக்கு எவ்விதமான அனுகூலமும் கிடைக்கக்போவதில்லை. தாவா மனுவை அனுமதிப்பதினால் எனக்கு சொல்லமுடியாத அளவு இன்னல், இழப்புகள் ஏற்படக்கூடியதாய் உள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் மனுவில் கண்ட ஆவணங்களை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்காமல் தற்போது ஆவணங்களை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பது சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானதாகும். எனவே, இந்த மாண்புமிகு நீதிமன்றம், இந்த மனுவை செலவுகளுடன் தள்ளுபடி செய்து, நீதி வழங்க உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதே ஆகும்.

16) **<u>மேல்முறையீட்டு வழக்கின் எழுவினா 1க்கான தீர்வு:-</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில், தாவா 1ம் இன சொத்து சொக்கலிங்காபுரம் கிராமம், ஆர்.ஆர்.நகர், கதவு எண்.11/9 ல் அமைந்துள்ள 3 ½ செண்ட் விஸ்தீரணம் கொண்ட காரை மட்டப்பா வீடாகும். தாவா 2ம் இன சொத்து மேற்படி கிராமத்தில் சர்வே எண்.195/1 ல் 2 செண்ட் விஸ்தீரணம் உள்ள காரை வீடும், அதில் உள்ள விவசாய பூமியும் தாவா 2ம் இன சொத்தாகும். தாவா 3ம் இன சொத்து மேற்படி கிராமத்தில் சர்வே எண்கள்.196/2 ல் 0.16 ஏர்ஸ், சர்வே எண்.10/3 ல், 9.50 ஏர்ஸ், 210/4 ல் 9.05 ஏர்ஸ், 211/3 ல் 0.26.50 ஏர்ஸ் கொண்ட புஞ்சை நிலம் ஆகும். மேற்படி தாவா சொத்து ஆதியில் கோபால கோனாருக்கு பாத்தியப்பட்டிருந்தது. மேற்படி கோபால் கோனாரின் மனைவி பெயர் ராக்கம்மாள் ஆவார். மேற்படி கோபால் கோனாருக்கு வாதியும், பிரதிவாதியும் வாரிசுகள் ஆவார்கள். கடந்த 1965ம் ஆண்டு வாதிக்கு திருமணமாகி வாதியின் கணவர் சென்னையில் பணிபுரிந்ததால் சென்னையில் குடியேற்றிவிட்டார். இந்நிலையில் கடந்த 10.06.1966 அன்று மேற்படி வாதியின் தகப்பனார் கோபால் கோனாரும், பிரதிவாதியும் சேர்ந்து பூர்வீக சொத்தான காலிமனையை வாதிக்கு நன்கொடையாக எழுதிக்கொடுத்து அனுபவம் செய்து வந்த நிலையில் 1974ம் ஆண்டு கோபால் கோனாரும், 1975ம் ஆண்டு கோபால் கோனாரின் மனைவியும் எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டனர்.

அதன்பின்பு 21.03.1996 அன்று வாதி தாவா சொத்தில் பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றுக்கொண்ட பிரதிவாதி வாதிக்கு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். இந்நிலையில் 07.05.2009 அன்று மீண்டும் ½ பாகம் கேட்டு அனுப்பிய அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி 09.05.2009 அன்று வாதிக்கு பதில் அறிவிப்பு அனுப்பியதன் பேரில் விசாரணை நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் 17.02.2017 அன்று வாதிக்கு ஆதரவாக தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, கோபால் கோனாருக்கு வாதி மற்றும் பிரதிவாதி தான் வாரிசுகள் என்று இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், 1966 ம் ஆண்டு வா.சா.ஆ.5 ன் படி வாதிக்கு பூர்வீக சொத்தில் காலியிடமாக நன்கொடையாக எழுதிக்கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி நன்கொடை ஆவணத்தை கோபால் கோனாரும், பிரதிவாதியும் சேர்ந்து தான் எழுதிக்கொடுத்ததன் பேரில் பிரதிவாதி வீடு கட்டினார் என்றும், மேற்படி வீடு கட்டுவதற்கு பிரதிவாதி ரூ.25,000/- செலவு செய்துள்ளார் என்றும், மேற்படி பூர்வீக சொத்து என்பதால் இந்த வழக்கில் சொத்தாக சேர்க்கப்படவில்லை என்றும், வாதி 21.03.1996 அன்று சொத்தில் பாகம் கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்பு 12 வருட கால வரம்பிற்குள் அசல் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அசல் வழக்கு காலவரம்பு தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்றும், மேலும் வாதியே பி.வா.சா.ஆ.1 ல் வழக்கறிஞர் அறிவிப்பில் 1974 ம் ஆண்டு கோபால் கோனாரும், 1975 ம்

ஆண்டு வாதியின் தாயார் ராக்கம்மாளும் எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மேலும், வாதி அசல் வழக்கிலும் வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பிலும், 37 ஆண்டுகளுக்கு முன்பாக வாதி, பிரதிவாதியின் பெற்றோர்கள் இறந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் 37 வருடங்களாக பாகம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் காலவரம்பால் பாதிப்படைந்துள்ளது என்றும், வாதி தனது சாட்சியத்திலே தாவா சொத்துக்களை பிரதிவாதியின் கூட்டு அனுபவத்தில் இருந்ததில்லை என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்றும், வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட வா.சா.ஆ.4 ம் பிரதிவாதி மட்டும் அனுபவம் செய்து வருகிறார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே வாதி செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றும், விசாரணை நீதிமன்றம் இரு தரப்பு ஆவணங்களை பரிசீலினை செய்யாமல் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது தவறு என்றும், எனவே விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் ரத்து செய்து மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டுமென்று வாதுரை செய்து, தனது வாதுரைக்கு ஆதரவாக 2021 (3) TNCJ 125 (MAD), 2024(2) CTC 273, 2024 MHC 3840 ஆகிய முன்தீர்ப்புகளை சுட்டிக்காட்டினார்.

எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, பிரதிவாதி வாதியின் முகவராக தான் பணிபுரிந்தார் என்றும், வாதியும், பிரதிவாதியும் சேர்த்து தான் சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்றும், வாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட நன்கொடை ஆவணம் சீதனமாக கொடுக்கப்பட்டது என்றும், பூர்வீக சொத்தாக

இருந்தாலும், நன்கொடையாக எழுதிக்கொடுப்பதற்கு தகப்பனாருக்கு உரிமை உண்டு என்றும், இருதரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலினை செய்து விசாரணை நீதிமன்றம் தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்கியுள்ளது என்றும், எனவே மேல்முறையீட்டை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதுரை செய்தார்.

ஆவணங்களை பரீசிலினை செய்ததில், தாவா சொத்துக்களும், வா.சா.ஆ.5 ல் கண்ட சொத்தும் ஆதியில் வாதி பிரதிவாதியின் தகப்பனாரான கோபால் கோனாருக்கு பூர்வீக சொத்தாகும். மேற்படி வாதிக்கு 1965 ம் ஆண்டு திருமணம் நடந்துள்ளது. பின்பு வா.சா.ஆ.5 ன் படியான பூர்விக சொத்தை காலிமனையாக கோபால் கோனாரும், பிரதிவாதியும் சேர்ந்து வாதிக்கு தானமாக எழுதிக்கொடுத்துள்ளனர். மேற்படி தான பத்திரத்தில் வாதி கூறுவது போன்று சீதனமாக எழுதிக்கொடுக்கப்பட்டதாக வாசகங்கள் இல்லை. மேற்படி வா.சா.ஆ.5 ல் கண்ட காலிமனை கோபால் கோனாருக்கும், பிரதிவாதிக்கும் பூர்விக சொத்து என்று குறிப்பிட்டு தான் தானமாக எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்தில் தான் வாதி 11/32 கதவு எண் கொண்ட வீடு கட்டப்பட்டுள்ளது தெரியவருகிறது. பிரதிவாதி தரப்பில் மேற்படி வீட்டிற்கு பிரதிவாதி ரூ.25,000/- செலவு செய்து வீடு கட்டிகொடுத்ததாக குறிப்பிட்டிருந்தாலும், அதற்கு ஆவணங்களோ, சாட்சியங்களோ பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேற்படி எழுதிக்கொடுத்த சொத்தானது கோபால் கோனாருக்கு பூர்விக சொத்து என்பதால் பூர்வீக சொத்தை பொறுத்த வரை வாதிக்கு தானமாக எழுதிக்கொடுப்பதற்கு எவ்வித உரிமையும் கிடையாது. மேற்படி சொத்து சொத்து விபரமாக காட்டப்பட்டிருக்க வேண்டும். வாதி முதலில் தாக்கல் செய்த

வழக்குரையில் மேற்படி சங்கதிகளை மறைத்து தான் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

அதன்பின்பு பிரதிவாதி தரப்பில் பதில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட பின்பு தான் பதில் எதிர்வழக்குரையில் மேற்படி வா.சா.ஆ.5 ன் படி சொத்து எழுதிக்கொடுக்கப்பட்ட விபரம் ஒப்புக்கொள்ளப்பட்டு சீதனமாக எழுதிக்கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சீதனமாக எழுதிக்கொடுக்கப்பட்டது என்று காட்டுவதற்கு வாதி தரப்பில் ஆவணங்களோ, சாட்சியங்களோ தாக்கல் செய்யப்படவில்லை.

வா.சா.1 தனது சாட்சியத்தில் " நான் முதன்முதலாக தாக்கல் செய்த வழக்குரையில் கதவு எண்.11/32 பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த சொத்து சீதனமாக கொடுத்த சொத்து என்பதால் சொல்லவில்லை " என்றும், " மேற்படி வா.சா.ஆ.5 ல் கண்ட சொத்தும் எனது தகப்பனாருக்கு பூர்வீக சொத்து ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் அறிவிப்பில் எனது தகப்பனார் எந்த விதமான ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளேன். வா.சா.ஆ.5 ல் கண்ட சொத்தினை எனது தகப்பனாரும், பிரதிவாதியும் சீதனமாக கொடுத்ததாக மேற்படி ஆவணத்தில் காண்பிக்கப்படவில்லை. வா.சா.ஆ.5 எனக்கு திருமணமான பிறகு தான் எழுதப்பட்டது " என்றும்

வா.சா.4 தனது சாட்சியத்தில் " வாதி மாரிமுத்தம்மாளுக்கு சொக்கலிங்கபுரத்தில் க.எண்.11/32 என்ற வீடு இருந்தது. இடிந்த நிலையில் உள்ளது. வாதியின் திருமணத்திற்கு பிறகு வாதிக்கும், அவரது சகோதரரான பிரதிவாதிக்கும்

இடையே ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின் பேரில் க.எண்.11/32 என்ற வீடு அவருக்கு கிடைக்கப்பெற்ற அவரது அனுபவத்தில் அது இருந்து வருகிறது என்றால் சரிதான். பிராதில் கண்ட சொத்துக்களை வைரவக்கோனார் அனுபவித்து வருகிறார். க.எண்.11/32 வீடு இடிந்த வீடு வாதியின் அனுபவத்தில் நான் இருந்து வருகிறது. மேற்படி வீட்டினை குடும்ப ஏற்பாட்டின்படி வாதிக்கு ஒதுக்கி அதற்கு ஆவணம எழுதிக்கொடுக்க வேண்டும் என்பதற்காக தான் 1966 ம் ஆண்டு வா.சா.ஆ.5 ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். குடும்ப ஏற்பாட்டின்படி கிடைத்த 11/32 வீட்டை தான் வாதி தனது மகளுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார். வாதிக்கு குடும்ப ஏற்பாட்டின்படி ஒதுக்கப்பட்ட க.எண்.1/32 வீட்டில் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரிதான். அதேபோன்று வைரவன் கோனாருக்கு குடும்ப ஏற்பாட்டில் ஒதுக்கப்பட்ட சொத்தில மாரிமுத்து கோனாருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது " என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

எனவே வா.சா.ஆ 5 ல் கண்ட சொத்து வாதி, பிரதிவாதிகளின் பூர்வீக சொத்து என்பதால் தாவா வழக்கு பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. விசாரணை நீதிமன்றம் வா.சா.ஆ.5 வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றும், அது குறித்து கேள்வி எழாது என்று கூறும் காரணமானது ஏற்புடையதாக இல்லை என்றும், தாவா வழக்கானது பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்று இந்நீதிமன்றம்

கருதுகின்றது.

அதேபோன்று பிரதிவாதி தரப்பில் வாதியின் பெற்றோர்கள் 1974, 1975 ம் ஆண்டு இறந்துவிட்டார்கள் என்றும், மேற்படி பெற்றோர்கள் இறந்தவுடன் வாதி பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், அதன் பின்பு 21.03.1996 அன்று வாதி பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், மேற்படி பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய 12 வருட காலத்திற்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. எனவே காலவரம்பு தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்று எடுத்துரைக்கப்பட்டது. பி.வா.சா.ஆ.1 பரீசிலினை செய்ததில், வாதி தன் வழக்கறிஞர் மூலம் 21.03.1996 அன்று பிரதிவாதியிடம் தாவா சொத்துக்களை பொறுத்து ½ பாகம் கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டு பிரதிவாதி பதில் அறிவிப்பினை அனுப்பியுள்ளார். ஆனால் மேற்படி பதில் அறிவிப்பை பிரதிவாதி தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை. வாதியின் வா.சாஆ.1 அறிவிப்பு அனுப்பியதை வழக்குரையிலேயோ, பதில் வழக்குரையிலேயோ மறைத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். ஆனால் விசாரணை நீதிமன்றம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியதை தாக்கல் செய்யாததால் காலவரம்பு பாதிப்படையவில்லை என்று கூறிய காரணமானது ஏற்புடையதாக இல்லை. வாதியே பி.வா.சா.ஆ.1ன் படி 21.03.1996 அன்று பாகம் கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய 13 வருடங்கள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் பி.வா.சா.ஆ.1 பரிசீலினை செய்ததில், வாதியின் தகப்பனார் 1974 ம்

ஆண்டு இறந்துள்ளார். மேற்படி 28 வருடங்கள் கழித்து தான் பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னர் 13 வருடங்கள் கழித்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வா.சா.1 தனது சாட்சியத்தில் " 21.03.1996 ம் தேதி பிரதிவாதிக்கு தபசில் சொத்துக்களில் பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு வழக்கறிஞர், திரு.கே.சுவாமிநாதன் என்பவர் மூலம் அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படுவதால் மேற்படி அறிவிப்பு என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் அது பற்றி என்னால் கூற இயலாது. நான் அனுப்பிய அறிவிப்பிற்கு நான் தான் வழக்கறிஞருக்கு விபரம் கூறினேன். மேற்படி அறிவிப்பிலும் (21.03.1996 ம் தேதியது) எனது தகப்பனார் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதாகதான் தெரிவித்துள்ளேன். அந்த அறிவிப்பில் வா.சா.ஆ.5 ஆவணம் பற்றி குறிப்பிடவில்லை. மேற்படி அறிவிப்பில் 1974 ம் வருடமும், எனது தகப்பனார் 1975 ம் வருடமும் இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளது சரிதான் " என்றும்,

" 1997 ம் வருடத்திற்கு பிறகு வா.சா.ஆ.1 அறிவிப்பான 2009 வரை பிராது தபசில சொத்துக்களில் எனக்குரிய பங்கை கேட்டு நான் அறிவிப்போ, வழக்கோ தாக்கல் செய்யவில்லை. 1997 ம் வருடத்தில இருந்து 2008 வரை நான் சென்னையில் தான் குடியிருந்து வந்தேன். நான் இராஜபாளையத்திற்கு அவ்வப்போது வந்து போவேன். அந்த சமயங்களில் எல்லாம் நான் பிராது தபசில் சொத்துக்களில் எனக்குரிய பங்கை பிரதிவாதியிடம் கேட்கவில்லை " என்றும்,

வா.சா.3 தனது சாட்சியத்தில் " எனது தாயார் 1996ம் வருடம் தபசில சொத்துக்களுக்கு பாகம் கேட்டு பிரதிவாதி அனுப்பினார் " என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

ஆக வா.சா.1 சாட்சியத்தில் பி.வா.சா.ஆ 1 வழக்கறிஞர் அறிவிப்பு மறைத்து தான் வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக வேண்டி புதிய வழக்குமூலம் காட்டடப்பட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது தெரியவருகிறது. விசாரணை நீதிமன்றம் வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொள்ளப்பட்ட விசயங்களை பரிசீலினை செய்யாமல், காலாவதி தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்று கூறியுள்ள சங்கதி ஏற்புடையதாக இல்லை.

இது குறித்து மேல்முறையீட்டாளர தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட

2021 (3) TNCJ 125 (MAD)
Umadevi vs. Janaki and others

9. The plaintiff filed a suit for partition claiming 1/6th share in the suit schedule property against the defendants. The plaintiff and the defendants are brothers and sisters. Their father derived title over the property by way of partition and also by purchasing from the third party. Thereafter on 09.03.1998, their father Egambaram died. The plaintiff filed the present suit after 12 years from the date of death of her father. In this regard, the Court below relied upon the Judgment reported in (2010) 7 MLJ 52 in the case of T.A.Yuvaraj and other Vs. T.Balakrishnama and other, and this Court held that the relevant portion is extracted hereunder :

"22. In the previous paragraph, it has been pointed out that a case of ouster and adverse possession extinguishing the right the plaintiffs in the suit property has been made out by the defendants. It has also been held that the possession of the first defendant became adverse to that of the plaintiffs from 25.01.1963, the date of Exhibit-B2 settlement deed.

Therefore, from the said date the possession of the property by first defendant became one for himself and it shall not be deemed to be a possession on behalf of the plaintiffs also. As such, the limitation for seeking

partition and separate possession viz., started from the said date 25.01.1963. The contention of the plaintiffs that they were not aware of the existence of such a settlement deed cannot be believed, as there are sufficient evidence to show that despite the fact that the first defendant was dealing with the property as if it were his absolute property by executing registered documents, the plaintiffs kept quite. As the suit has not been filed within 12 years from the date on which the possession of the first defendant became adverse, the present suit filed by the plaintiffs is to be held as one barred by limitation."

10. The case of ouster and adverse possession extinguishing the right of the plaintiff in the suit property has been made out by the defendants. In the case on hand, the plaintiff got marriage in the year with one Sathyamoorthy. After her marriage, she lived with her husband in a rental house. Thereafter, her father died on 09.03.1998. After demise of her father, all the defendants are in possession and enjoyment of the suit property. In fact, the defendants have constructed house in the suit property and they are residing there. The plaintiff never questioned about the possession and enjoyment of the suit property. Therefore, the possession and enjoyment of the suit property becomes adverse from the date of death of their father i.e., on 09.03.1998. The present suit has been filed after 12 years from the date of death of their father, therefore, the suit itself is barred by limitation

என்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்த வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

மேலும் பி.வா.சா.ஆ.2 முதல் 6 வரை ஆவணங்களை பரிசீலினை செய்ததில், பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதும் தெரியவருகிறது.

வா.சா.4 தனது சாட்சியத்தில் " பிராது தபசில் சொத்தில் ஒரு வீடு பழைய வீடு ஒரு வீடு புதிய வீடு பிராது 2 வது தபசில் உள்ள விவசாய இடத்திற்குள் உள்ள காரை வீட்டை ராஜேந்திரனும், போஜராஜனும் நான் குடியிருந்து வருகிறார்கள். ஆனால் அந்த நிலம் பிரதிவாதிக்கு சொந்தமானது. 1வது தபசில் சொத்தில் காட்டப்பட்டுள்ள வீடு பிரதிவாதிக்கு சொந்தமான வீடாகும். அதில் பிரதிவாதி

தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பிராது 3 வது தபசில் சொத்துக்களை வைரவக்கோனாருக்கு பாத்தியப்பட்டது தான் அதை அவர் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான் அது அவருக்கு பூர்வீக சொத்து. பிராது 3 வது தபசில் இருந்து வரும் விளைபொருட்களை அவரே அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். ஆனால் பிரதிவாதி வாதிக்கு விளைச்சல் பங்கு கொடுப்பதாக சொன்னால் ஆனால் தரவில்லை அவ்வாறு பங்கு கொடுப்பதாக எந்த தேதியில் சொன்னார் என்று எனக்கு தெரியாது " என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

ஆக பிரதிவாதி தான் மேற்படி சொத்தை கோபால் கோனார் இறந்த பின்பு அனுபவம் செய்து வருகிறார் என்பது தெரியவருகிறது. எனவே மேற்படி சொத்தானது பிரதிவாதியின் அனுபவத்தில் இருப்பது தெரியவருகிறது. வாதியும் 37 வருடங்களாக கோபால் கோனார் இறந்த பிறகு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதும், பி.வா.சா.1 மற்றும் வா.சா.1, 2 குறுக்குவிசாரணையில் தெரியவருகிறது.

இது குறித்து மேல்முறையீட்டாளர தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட

2024 MHC 3840

Udayam and others vs S.Jothimurugan and others

He also admitted that,Packirisamy, the predecessor of the plaintiffs’ approached Swaminatha Mudaliyar 25 years back and demanded partition. However, he refused the claim of the plaintiffs on the ground that he purchased the entire suit property. Even assuming that the said point of time(demand for partition 25 years back) was taken as starting point of hostile possession by Swaminatha Mudaliyar, the present suit filed by the Plaintiffs after 25 years, is clearly barred by limitation. Apart from that, the admissions of P.Wl, Ex.B2- Mortgage deed

executed by Swaminatha Mudaliyar in favour of selvaraj under ExB2 also supports the plea of adverse possession. The predecessor of defendants 1 and 2, who purchased the entire suit property from Swaminatha Mudaliyar in the year 1952 under Ex.B2, mortgaged the suit property in favour of one Selvaraj on 5.9.1980. Therefore, it is clear that Swaminatha Mudaliyar had exercised full control over the suit property all along. Ex.B4 is the tenancy chit executed by Swaminatha Padayachi in favour of Swaminatha Mudaliyar in respect of the property sold to Swaminatha Mudaliyar under Ex.A1. The suit property situate in R.S.No.150/1A1 was also dealt with in the partition deed entered into in the family of Swaminatha Mudaliyar under Ex.B5. All these documents coupled with clear admission of P.W.1 would indicate that Swaminatha Mudaliyar had been exercising full control over the suit property from the date of purchase in the year 1959 and the demand for partition made by the plaintiffs predecessor-in- interest Packirisamy was refused by him 25 years back. In such circumstances, defendants 1 and 2 have been in possession and enjoyment of the entire suit property with necessary animus for more than the statutory period.

என்று சொல்லப்பட்டுள்ள சங்கதியானது இந்த வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

வாதி அசல் வழக்கை தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக குறிப்பிட்டு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 37(2) ன் கீழ் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி தரப்பில் தாவா சொத்தை வாதி அனுபவம் செய்யவில்லை என்று எடுத்துரைக்கப்பட்டது. வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட வா.சா.4 தனது சாட்சியத்தில் பிரதிவாதி தான் மேற்படி சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

வா.சா.1 தனது சாட்சியத்தில் " வாதிக்கு திருமணம் முடிந்த நாளிலிருந்து அவர் சென்னையில் தான் குடியிருந்து வருகிறார். வாதியின் கணவர் சென்னையில்

காவல்துறை அதிகாரியாக பணிபுரிந்து வருவதால் வாதி சென்னையில் குடியிருந்து வருகிறார் தற்போது வாதி சென்னையில் குடியிருந்து வருகிறார். வாதி அவரது கணவர இறந்த பின்பும் அவரது சொந்த வீட்டில் சென்னையில் குடியிருந்து வருகிறார் " என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

ஆக மேலும் பி.வா.சா.ஆ.2 முதல் 6 மற்றும் வா.சா.8 ஆகியவற்றிலிருந்து பிரதிவாதி தான் சொத்தை அனுபவம் செய்துவருகிறார். ஆனால் வாதி கூட்டு அனுபவத்தில் இருப்பதாக நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார். வாதி தாவா சொத்தை அனுபவம் செய்து வரவில்லை. வாதி தரப்பில் மேற்படி தாவா சொத்தில் வருமானத்திலிருந்து பங்கை தரவில்லை என்பதும் தெரியவருகிறது. பிரதிவாதி தான் மேற்படி தாவா சொத்திலிருந்து வரும் வருமானத்தை பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்பது தெரியவருகிறது. எனவே, வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

இது குறித்து மேல்முறையீட்டாளர தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட

2024 (2) CTC 273
S. Ekambaram Vs K.Nallathambi என்ற வழக்கில்

16. Even with regard to the contention regarding valuation and improper Court fee being paid, I am in agreement with the submission of the learned Senior Counsel appearing for the appellant. In a suit for partition, the plaintiff shall be entitled to pay the fixed Court fee under Section 37 (2) of the Tamil Nadu Court fees and Suits Valuation Act, 1955 only if he is in joint possession of the property. It is settled law that the such a plaintiff need not be in actual physical possession and as long as his share in the suit property is definite and subsisting, he is deemed to be in constructive possession of the suit property, jointly along with other co-owners who may be actually in physical possession of the suit property. Even in such cases, the plaintiff who seeks partition can take advantage of the fixed Court fee payable under Sub

> Section (2) of Section 37 of the Tamil Nadu Court Fees and Suits Valuation Act, 1955. However, here admittedly the property has been sold even by the father of the plaintiff in the year 1997 and right from that date, the defendant has been in physical possession of the entire suit property to the exclusion of any of the family members of the plaintiff. Therefore, in such a case, the plaintiff cannot claim to be in joint possession and he ought to have valued the suit under Section 37 (1) and not under Section 37(2) of the Tamil Nadu Court Fees and Valuation Act, 1965. Even viewed from this angle the suit for partition is liable.

என்று சொல்லப்பட்டுள்ள சங்கதியானது இந்த வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

வாதிகள் நீதிமன்றக்கட்டணமாக தமிழ்நாடு நீதிமன்றக்கட்டணச்சட்டி பிரிவு 37(2)ன் கீழ் செலுத்தியுள்ளார். ஆனால், வா.சா.1 தனது சாட்சியத்திலேயே தான் பிரதிவாதியுடன் கூட்டு உரிமையில் அனுபவம் செய்து வரவில்லை என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், வாதி தமிழ்நாடு நீதிமன்றக்கட்டணம் சட்டப்பிரிவு 37(1)ன் கீழ் தான் நீதிமன்றக்கட்டணம் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால், வாதி பிரதிவாதிகளுடன் தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக பிரிவு 37(2)ன் கீழ் நீதிமன்றக்கட்டணம் செலுத்தியுள்ளார். எனவே மேற்முறையீட்டாளர் கோரும் பரிகாரம் மேல்முறையிட்டளாருக்கு கிடைக்கத்தக்கது என்று முடிவு செய்து அவ்வாறே மேற்படி எழுவினாக்கள் மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக முடிவு காணப்படுகிறது.

**17) <u>இ.ம.எண்.01/2019 மனுவின் தீர்வு</u> :-**

பி.வா.சா.ஆ.2 முதல் 6 வரை ஆவணங்களிலிருந்து பிரதிவாதி தான் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்பது இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் இம்மேல்முறையீட்டு வழக்கிற்கு பிறகு உண்டான ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்களை வைத்து மேல்முறையீடு

தீர்மானிக்க வேண்டிய அவசியமோ, முகாந்திரமோ ஏற்படவில்லை என்பதால் மேற்படி மனுவினை அனுமதிக்க வேண்டி ய அவசியமில்லை என்று கருதி மேற்படி மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**18) <u>எழுவினா 2</u> <u>க்கான தீர்வு :-</u>**

எழுவினா 1 மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், இந்த மேல்முறையீடு வழக்கில் இம்மேல்முறையீட்டாளர் கோரியுள்ள வேறு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 2 க்கு தீர்வு காணப்படுகிறது.

**19) முடிவில்**,

1) இ.ம.எண்.01/2019 மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2) மேல்முறையீடு செலவு தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

3) விசாரணை நீதிமன்றத்தின் 17.02.2017 ம் தேதியிட்ட தீர்ப்பும், தீர்ப்பாணையும் ரத்து செய்யப்படுகிறது.

4) விசாரணை நீதிமன்றத்தில் வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு கண்டு அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SHUNMUGAVEL RAJ
Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.

**<u>மேல்முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் -</u>** இல்லை

**<u>எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள் -</u>** இல்லை

**<u>எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பு சான்றாவணங்கள் -</u>** இல்லை

SHUNMUGAVEL RAJ
Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.